<u>சுருக்கம்</u>

மாற்றுத் திறனாளிகள் நலன் –2011–2012ஆம் நிதியாண்டு – மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி மாவட்டந்தோறும் 75 மாற்றுத் திறனாளிகளுக்கு அளித்தல் மற்றும் உணவு மற்றும் விடுதி வசதி தொண்டு நிறுவனங்கள் மூலம் ஏற்படுத்தித் தருதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.34 நாள்: 16–03–2012

பங்குனி 3, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்1, மாற்றுத் திறனாளிகள் நலத் [மா.தி.ந.(2)] துறை, நாள் 21–04–2010.

மீண்டும் படிக்க:

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.6677/மா.தி.ந. 3.1./2011, நாள் 16.07.2011 மற்றும் 13.12.2011

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளின் வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையங்களை முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை ஆகிய 12 மாவட்டங்களில் அமைக்கவும், சென்னை, மதுரை, காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்கள் பெரிய மாவட்டங்கள் என்பதால், இம்மாவட்டங்களில் கூடுதலாக ஒன்றுக்கு மேற்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்க மொத்தம் ரூ.38,38,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பற்றி ஆய்வு மேற்கொண்டபோது, மீதமுள்ள 20 மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற் பயிற்சி நிலையங்கள் நடத்த ரூ.1.00 கோடி ஒதுக்கிட இசைவளித்தார்கள். 2011–2012 ம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை எண்.52–ன் மீதான விவாதத்தின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு செய்யப்பட்டது.

"மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் 20 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும். மேலும் மாற்றுத் திறனாளிகள், தனியார் துறையில் பணி நியமனம் பெறும்

வகையில் திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, நீலகிரி, திருப்பூர், கரூர், திண்டுக்கல், அரியலூர் பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், தேனி, விருதுநகர், புதுக்கோட்டை, விழுப்புரம், கன்னியாகுமரி, மற்றும் கடலூர் ஆகிய 20 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம், தங்கும் வசதியுடன், தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்படும்''.

3. 2010–2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தொழிற்பயிற்சிகளுக்கான சான்றிதழ்கள் தொண்டு நிறுவனம் மூலமாகவே அளிக்கப்பட்டது என்றும், சுயதொழில் செய்வதற்கேற்றவாறு உள்ளதாகவும், தீவிர மனவளர்ச்சி குன்றியோருக்கு அந்தந்த இல்லங்களிலேயே பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றும், கை, கால் பாதிக்கப்பட்ட, கண் பார்வையற்ற, செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் மிதமான மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு, சுயதொழில் மற்றும் தனியார் நிறுவனங்களில் அதிக வேலைவாய்ப்பு பெறும் வகையில் NCVT சான்றிதழ் பயிற்சிகள் தொழிற்திறன் மேம்பாட்டு பயிற்சி (Modular Employable skill) திட்டத்தின் மூலம் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் குறுகிய காலத்திற்கு அளிக்கலாம் என்றும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும், மத்திய அரசு நிதி உதவியுடன் குறுகிய கால தொழிற்திறன் மேம்பாட்டு பயிற்சி (MES) வழங்கப்பட்டு வருகிறது எனவும், தொழில்திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின் விவரத்தினையும் அரசுக்கு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அனுப்பியுள்ளார்.

4. மேலும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலமும், மத்திய அரசு அங்கீகாரத்துடன் வழங்கி NCVT சான்றிதழ் பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருவதாகவும், எனவே, அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் அல்லது மாவட்ட ஆட்சியரால் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய அரசு (NCVT) அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வருடத்திற்கு குறைந்தபட்சம் தலா 75 மாற்றுத் திறனாளிகளுக்கு (கை கால் பாதிக்கப்பட்டோர், கண் பார்வையற்றோர், செவித் திறன் பாதிக்கப்பட்டோர், மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கு) குறுகிய கால தொழிற் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கலாம் எனவும், (50 மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு தொழிற் பயிற்சி மையங்கள் மூலமாகவும், 25 மாற்றுத் திறனாளிகளுக்கு தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவும்) தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கும் மாவட்டத்தில், ஒரு மாற்றுத் திறனாளிக்கு பயிற்சிக் கட்டணத் தொகையாக ரூ.1,500/–ம், அரசு தொழிற்பயிற்சி மையத்தில் வெற்றிகரமாக பயிற்சியை முடிக்கும் மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் விதத்தில் ஒரு மாணவருக்கு ரூ.1,500/– வீதம் பயிற்சி உதவித் தொகையாக வழங்கலாம் என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்து, 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்க அனுமதியும், ரூ.1,34,12,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்டத்தில் ரூ.38,38,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தெரிவித்துள்ளார்.

5. இத்திட்டம் ஒரு புதிய திட்டமாக உள்ளதால், மாவட்டங்களிலிருந்து முழுமையான கருத்துருக்கள் பெறப்படவில்லை எனவும், அரசாணை பெற்ற பின்னரே பயனாளிகள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களை தேர்வு செய்ய இயலும் என்பதாலும், மாவட்டத்திற்கேற்றவாறு பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்படும் என்றும், தற்போது இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை துல்லியமாக கணக்கீடு செய்ய இயலாது என்றும்,

மாற்றுத் திறனாளிகள் பயிற்சி பெறும்போது, அரசு தொழிற் பயிற்சி மையங்களில் விடுதி வசதி இல்லாததால், தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கிட மாவட்ட ஆட்சியாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு மாணவருக்கு மாதமொன்றிற்கு ரூ.1200/– என்ற வீதத்தில் உதவித் தொகை வழங்கலாம் எனவும், பயிற்சி வழங்கும் நிறுவனங்கள், பயிற்சியாளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தங்கும் விடுதிகள் ஆகியவை ஏற்படுத்தி தருவதற்கு, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள், ஆலோசனைகள் பெற்று திட்டம் செம்மையாக செயல்படுத்திட, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களின் 3 பிரதிநிதிகள் மற்றும் தொழில் முனைவோர் சங்க பிரதிநிதி ஆகியோர் கொண்ட குழுவினை ஏற்படுத்தி, அவர்களின் ஆலோசனை பெற்று, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் இத்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்திட அறிவுறுத்தலாம் என்றும், மேற்காணும் திட்டத்தினை செயல்படுத்த, பின்வருமாறு நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | செலவின விவரம் | பயிற்சியாளர் / சிறப்பு பயிற்றுநர் எண்ணிக்கை | செலவின விவரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பயிற்சி உதவித் தொகை (அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மட்டும்) | 50 பயிற்சியாளர்கள் x 32 மாவட்டங்கள் = 1600 நபர்கள் | ரூ.1500/- x 1600 நபர்கள் | ரூ..24,00,000/– |
| 2 | தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயில்பவர்களுக்கு கல்விக் கட்டணம் (தொண்டு நிறுவனங்களுக்கு) | 25 பயிற்சியாளர்கள் x 32 மாவட்டங்கள்= 800 நபர்கள் | ரூ.1500/– x 800 நபர்கள் | ரூ.12,00,000/– |
| 3 | உணவு மற்றும் தங்கும் வசதி | 2400 நபர்கள் (1600 + 800) | ரூ.1200/- x 2400 நபர்கள் x 3 மாதங்கள் | ரூ. 86,40,000/– |
| 4 | சிறப்புப் பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் (செவித் திறன் பாதிக்கப்பட்டோர் மற்றும் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோர்) | 32 மாவட்டங்கள் x 2 சிறப்புப் பயிற்றுநர்கள் = 64 | 64 சிறப்புப் பயிற்றுநர்கள் x ரூ.100/– x 120 மணி நேரங்கள் (ரூ.100 ஒரு மணி நேரத்திற்கு) | ரூ.7,68,000/– |
| 5 | சில்லறை செலவினங்கள், (திட்டத்தினை பதிவு செய்தல், தனியார் நிறுவனங்களுடன் கூட்டம் நடத்துதல்) | 32 மாவட்டங்கள் | 32 x ரூ.5000/- | ரூ.1,60,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | விளம்பர கட்டணம் (மாவட்ட ஆட்சியர், தொழிற் பயிற்சி மையம், மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் விளம்பர பலகைகளை வைத்தல் மற்றும் துண்டு பிரசுரங்கள் அளித்தல்) | 32 மாவட்டங்கள் | 32 x ரூ.1500/- x 3 இடங்கள் | ரூ.1,44,000/– |
| 7 | தனியார் நிறுவனம் மூலம் மாவட்ட அளவில் திட்ட மதிப்பாய்வு செய்தல் | -- | -- | ரூ.1,00,000/– |
| **மொத்தம்** | | | | **ரூ.1,34,12,000/–** |

6. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

(i) 2011–12 ஆம் நிதியாண்டில் மாவட்டந்தோறும் 75 மாற்றுத் திறனாளிகளை தேர்ந்தெடுத்து, அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களின் தேவைக்கேற்ப, குறுகிய கால தொழிற் திறன் மேம்பாட்டு பயிற்சியினை (Modular Employable Skill) அளிக்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் தங்கும் வசதி மற்றும் உணவு அளிக்கவும், இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி ரூ.74,88,000/– (ரூபாய் எழுபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் ஆணையிடப்படுகிறது.

(ii) பயிற்சி வழங்கும் நிறுவனங்கள், பயிற்சியாளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தங்கும் விடுதிகள் ஆகியவை ஏற்படுத்தி தருவதற்கு, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள், ஆலோசனைகள் பெற்று திட்டம் செம்மையாக செயல்படுத்திட, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களின் 3 பிரதிநிதிகள் மற்றும் தொழில் முனைவோர் சங்க பிரதிநிதி ஆகியோர் கொண்ட குழுவினை ஏற்படுத்த மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 6(i)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2235–சமூக பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன்–001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது–AF மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் – 72 பயிற்சி''

(த.தொ.கு 2235–02–001–AF–7208)

8. மேலே பத்தி 6(i)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.74,88,000/–ல் 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.38.38 இலட்சம் போக கூடுதலாக தேவைப்படும் ரூ.36,50,000/–ஐ 2011–12–ம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2011–12–ம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் நிதி(சந)துறைக்குஅனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இக்கூடுதல் செலவினத்தை 2011–12 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் நிதித் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.நிதி(சந)/92/DS(VS)/12, நாள் 16.3.2012 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1867(ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தேழு)–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி த்(சந/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை,சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>**இணைப்பு**</u>

**(அரசாணை(நிலை) எண்.34, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 16–03–2012)**

| **வரிசை எண்.** | **செலவின விவரம் கோரப்படுவது** | **செலவினத் தொகை அனுமதிப்பது** | **மொத்தம் (ரூ.)** |
|---|---|---|---|
| 1. | தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு கல்விக் கட்டணம் (மூன்று மாதப் பயிற்சிக்கு ரூ.1500/–) | 25 மாற்றுத் திறனாளிகள் x 32 மாவட்டங்கள் = 800 நபர்கள் x ரூ.1000/– (இரண்டு மாதங்களுக்கு) | 8,00,000/– |
| 2. | உணவு மற்றும் தங்கும் வசதி (அரசு தொழிற்பயிற்சி மற்றும் தனியார் தொழிற்பயிற்சி) | 2400 மாற்றுத் திறனாளிகள் x ரூ.1200/– x 2 மாதங்கள் | 57,60,000/– |
| 3. | சிறப்பு பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் (செவித்திறன் மற்றும் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்காக) – 32 மாவட்டங்கள் x 2 சிறப்புப் பயிற்றுநர்கள் | 64 சிறப்புப் பயிற்றுநர்கள் x ரூ.100/– x 120 மணி நேரம் (ஒரு மணி நேரத்திற்கு ரூ.100/–) | 7,68,000/– |
| 4. | சில்லறைச் செலவினம் | 32 மாவட்டங்கள் x ரூ.2000/– | 64,000/– |
| 5. | விளம்பரக் கட்டணம் | 32 மாவட்டங்கள் x ரூ.1500/– x 2 இடங்கள் | 96,000/– |
| **மொத்தம்** | | | **74,88,000/–** |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.